புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

================================================================================

# புறநானூற்றில் வாள்நுதல் விறலியர்

முனைவர். கமலா.கோ.
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.

================================================================================

*முன்னுரை:*

*உலகில் மனித உயிர் தோன்றிய பொழுதே கலையும் உயிர்பித்துவிட்டன என்றே பெருமிதம் கொள்ளலாம். தன்னுணர்ச்சிப் பாக்களாக விளங்கும் பண்டைப்பனுவல்களில், கலை, தலைசிறந்த இடத்தைப் பெறுகின்றன. கற்காலந்தொட்டே கலை மனிதர்களுள் புகுந்துவிட்டன. கல்லும் கல்லும் சேர்த்து உரசி அதன் மூலம் உராய்வுத்தன்மை ஏற்பட்டு தீப்பொறி கிளம்பியது முதல், இன்று உள்ளங்கையளவில் உலகம் என்பது வரை, கலை வெளிப்படுகிறது. வில், பறை, இசை போன்ற கலைகளும் ஆதியிலே உருவாகியதன என்பதற்கான சான்றுகள் சங்கயிலக்கியங்களில் காணக்கிடக்கின்றன.*

*உள்ளக்குறிப்பினைத் தம் உடம்பில் தோன்றும் மெய்ப்பாடுகளால் புலப்படுத்தும் தன்மை கலைஞருக்கு உரித்தனவாகும். இதன் அடிப்படையின் வாயிலாக விறலியின் இயல்பு ஆடுதல். எனவே அவளை ஆடுக விறலியர் என்று இயல்பாய் எவ்வித அதிகாரத் தோரணையும் இல்லாமல் அழைக்கும் வழக்கமும் இடம்பெற்றுள்ளன. இதனைப் புறநானூற்றின் வாயிலாக விறலியரின் கலை மேம்பாட்டின் தன்மையை அறிந்துகொள்ளலாம்.*

*கலை:*

*ஒரு மனிதன் தன்னுடைய கற்பனைக்கு எட்டாப்பொருளைச் சிந்தனைக்கும் மனவளர்ச்சிக்கும் ஏற்றவாறு வெளிப்படுத்தும் சிறந்த திறனே "கலை" எனப்படுகிறது. நேர்த்தியுடனும் செறிவுடனும் நுட்பத்துடனும் உருவாக்கப்படும் படைப்புகள் அனைத்தும் கலை என்றே சொல்லப்படுகின்றன. "காண்கின்ற காட்சியிலும் கேட்கின்ற இன்னோசையிலும் மனங்கவிழ்ந்து நாட்டத்துடன் திரட்டப்படும் அழகுணர்வை, ஒருவன் எவ்வாறேனும் புறக்கருவி வாயிலாகப் புலப்படுத்த ஆர்வங்கொள்கின்றான். அவன் கல்லைக் கருவியாகக் கொண்டு சிற்பத்தையும், வண்ணத்தைக் கருவியாகக் கொண்டு ஓவியத்தையும், ஓசையைக் கருவியாகக் கொண்டு கூத்தையும் நிகழ்த்துதோடு சிறப்பான ஒவ்வொன்றையும் கருவியாகக் கொண்டு ஒவ்வொரு கலையையும் வினைப்பாங்குடன் உருவாக்கலானான். இவ்வாறாக உருவாக்கப்பட்ட கலை பற்றிச் சிந்திக்கையில் கலை என்பது செயல் திறனைச் சிறப்பாக உணர்த்துகிறது"[1] என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடுகிறது. சங்ககால மகளிரின் கலை உணர்வு அவர்கள் ஆடல், பாடல், ஆகியவற்றில் பங்கு பெற்றதன் அடிப்படையிலும் ஒப்பனைச் சான்றுகளிலும் புலப்படுகின்றது. மலர், தளிர், மாலை, கண்ணி, தழை, சங்கு, முத்து ஆகிய அணிகலன்களை அணிவது, பொன்போன்ற அணிகலன்களைப் பயன்படுத்தியது போன்றவையாகும். அணிகலன்கள் உடை, மலர், வாசனைப் பொருட்கள் பயன்படுத்துவதில் அவர்கள் காட்டிய கலையின் தேர்ச்சியை அறியும் வகையில், தங்களின் கலைக்கு ஏற்றாற் போல் ஆடைகளை அணிந்தனர். இதனடிப்படையில் விறலியரின் கலை குறித்த தகவல்களை ஆராய்வோம்.*

*விறலியர்— விளக்கம்:*

*சங்ககாலப் பெண்களில் விறலியர், பாடினியர், கூத்தர், புலவர்கள் போன்றோர் கலைத்துறையில் முதலிடம் பெறுகின்றனர். ஆற்றுப்படை நூல்களில் விறலியாற்றுப்படையும்,*

கூத்தராற்றுப்படையும் தனக்கென இடத்தைப் பெற்றுச் சிறப்பு செய்துள்ளன. கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகிய நால்வகைக் கலைஞருள் விறலி கலை உலகத்தில் ஆடல் கலையில் வல்லவராய் போற்றப்படுகின்றாள்.

"விறலி" என்ற சொல் தமிழறிந்த சான்றோருக்கு மிகவும் பழக்கமான சொல்லைாகத் தோன்றினும், விறலியர் யார் என்ற வினாவிற்குத் தெளிவான விடையை ஐயமின்றி விளக்குவார் அரிதாகவே உள்ளனர். காரணம் விறலி பற்றிய தெளிவான பாடம் நமக்கு இல்லை. இன்று தமிழிலுள்ள தரமான அகராதிகள் விறலி என்ற சொல்லுக்குப் பொருள் தரும் பொருண்மை சதுரகராதியில் அமைகிறது.

"விறலி பதினாறு வயதுப் பெண்"[2]

"விறலி-பாடன் மகடூஉ, பதினாறு வயதுப்பெண்"[3]

இதனையே கழகத் தமிழகராதி,

"விறலி-பாணப்பெண் உள்ளக்குறிப்புப் புறத்து வெளிப்பட
ஆடுபவள் பதினாறு வயதுப்பெண்"[4] என்று பொருள் கூறுகின்றது. இதனையே தமிழ் மொழியகராதியும்

"விறலி-பதினாறு வயதுப்பெண், பாடன் மகடூஉ"[5]

என்று குறிப்பிடுகின்றது. "பிங்கல முனிவர் அருளிய பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு, விறலி – வெற்றி,வலிமை, வெற்றியும் வலிமையும் விறலியாகும்"[6] என்று பொருள் தருகின்றது. அபிதான சிந்தாமணி " எண்வகைச் சுவையும், மனத்தின் கண்பட்ட குறிப்புகளும் புறத்துப் போந்து புலப்பட ஆடுதல் விறலாதலின் அதனையாடுபவள் விறலி எனப்பட்டாள்"[7] என்று பொருள் தருகின்றது.

"பாடுவாள் விறலி பாண்மகள் மதங்கி
பாட்டி பாடினி பாடன் மகடூஉ
இரட்டைப் பாடுவிச்சி என்றிசைப் பரே"[8]

அபிதான மணிமாலை விறலியர் என்பவள் பாடவல்லவள் என்பது பெறப்படும். இதனுள் இரட்டைப் பாடுவிச்சி என்ற தொடர் புதுமையாக உள்ளது. இரண்டு பேராக இணைந்து பாடுவார்கள் என்பது இதன் பொருளாக இருக்கலாம். ஆனால் விறலியரை இரட்டைப் பாடுவிச்சி என்று வேறு எந்த அகராதியும் கூறவில்லை என்பது இங்கே கருதத்தக்கது. விறலியரைப் பாடவல்ல கலைஞராக மட்டும் கருதியது எனத் தெரிகிறது.இரட்டைப் பாடுவிச்சி என்றதால் விறலியர் இருவராக இணைந்து பாடும் கலையில் வல்லவர் என்பது அபிதான மணிமாலை தரும் சிறப்புச் செய்தியாகும்.

தொல்காப்பியரும் பொருளதிகாரத்தில் கலைக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்து, வாழ்க்கையோடு ஒன்றிணைந்து விளங்கும் கலைத்துறைக்கு விளக்கம் கொடுத்துள்ளதை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"[9]

இந்நூற்பாவின் மூலம் கூத்தர், பாணர், பொருநர், விறலியர், என்ற நான்கு இரவலரும் பரிசில் பெற்று வந்த போது வழியில் வருகின்றோர்க்குப் பெற்ற பெருவளத்தைக் கூறிப் பெறாதரிடம் சென்று பரிசில் பெறுக என்று ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

விறலியர் என்று விறல்களை விரித்து ஆடுபவர்களைக் கூறுவர். விறல்புலப்பட ஆடிய பாண் மகளிர் விறலியர் எனப் பெயர்பெற்றனர். அத்தகைய விறலியர்க்கு இசைப்புலமையும் நிறைந்திருந்தது என்ளு சங்கப்பாடல்கள் சான்று பகர்கின்றன. "ஆடல் பாடல் கூத்து இவற்றில் சிறந்து விளங்கும் மகளிர் விறலியர், பாடினியர் என்று சுட்டப்பட்டனர். இவர்கள் பாணர், பொருநர் என்பவர்களோடு சென்று மன்னர்களையும் வள்ளல்களையும் சந்தித்துத் தங்களின் ஆடல் பாடல்களால் அவர்களை மகிழ்வித்து அதற்குப் பரிசாகப் பொன்மலரினைப் பெற்றவர்களாவார்கள்"[9].இவர்கள் பரத்தையர் இனப்பெண்களில் இருந்து வேறுபட்டவர்கள். பாணரையும் பொருநரையும் மணம் செய்து கொண்டு இவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும். சமூகத் தொடர்புடைய இப்பெண்களும் எண்ணிக்கையில் குறைவாகவே இருந்திருக்கவேண்டும்.

1. "விறலி – Female dancer who exhibits the various emotions and Sentiments in her dace. உள்ளக்குறிப்புப் புறத்து வெளிப்பட ஆடுபவள்.

2. *Women of the 'pan' caste* பாண் சாதிப்பெண்''[10]

விறலியருக்குப் பல வகையான விளக்கங்களைக் கொடுத்தாலும் ''ஆடல்கலையில் வல்லவர்'' என்ற ஒரே பொருளை மட்டுமே அகராதி, களஞ்சியம், நிகண்டு முதலியவை குறிப்பிடுகின்றன.

1. பதினாறு வயதுப்பெண்
2. பாடன் மகடூஉ
3. பாணப்பெண்
4. உள்ளக் குறிப்புப் புறத்து வெளிப்பட ஆடுவாள்
5. பாடும் மகடூஉ
6. விறல் படப் பாடியாடும் மகளிர்
7. மதங்கி
8. பாடினி
9. இரட்டைப் பாடுவிச்சி

அகராதிகள் அனைத்தும் விறலியரை பாடகியர் என்றே குறிப்பிடுகின்றன.

விறலியின் பண்புகள்:

சங்க இலக்கியச் சான்றுகளின் துணைகொண்டு ஆராயும்பொழுது, விறலியர் கலைகளில் சிறந்தவளாகவும் மென்மைத்தன்மை உடையவளாகவும், ஒளிபொருந்திய நெற்றியை உடையவளாகவும் ஒரு சில வளையல்களை அணிந்தவளாகக் காட்சியளிக்கின்றாள். அதனை,

'' காட்சி மஞ்ஞையின் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து''[11]

இவ்வடிகளின் வாயிலாக வளையலை அணிந்தவள் என்று வர்ணிக்கப்படுகிறாள். இதுபோலவே, விறலியரை குவளை மலருக்கு ஒப்பாகக் கூறியும், சுற்றிச் சுற்றிச் சுழன்றாடிய விறலியரை,

''இலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்று''[12]

''செல்லாயோதில் சில்வளை விறலி
மலர்ந்த வேங்கையின் வயங்கிழை அணிந்து
மெல்லியல் மகளிர்''[13]

''சேயிழை பெறுகுவை வாள்நுதல் விறலி''[14]

இவ்வடிகள் கொண்டு நெற்றி முதல் பாதம் வரை வர்ணனை செய்துள்ளனர். இவர்கள் கலைகளை மூலதனமாகக் கொண்டு அதிலிருந்து கிடைக்கும் வருவாயில் வாழ்க்கை நடத்தியுள்ளனர். இதனால் இப்பெண்டிரைத் தொழில் மகளிர் எனவும் குறிப்பிடப்படுகின்றனர். ஆடவர்கள் தலைமைப் பொறுப்புடையவர்களாக அமைவது மட்டுமல்லாமல் பெண்ணும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தியுள்ளனர்.

விறலியரின் அணிகலன்:

கூத்து நிகழும் வண்ணம் விறலியர் தன்னை அலங்கரித்துக் கொண்டு ஆடும்வழக்கம் உண்டு. அதனடிப்படையில் வந்ததுதான் பட்டம், பரிசில் பெறுவது ஆகும். பார்வையாளரைக் கவரும் வண்ணம் தங்களை அழகுபடுத்திக் கொண்டனர். அப்பொழுதுதான் கதைக்கேற்றவாறு தன் வெளிப்பாடுகளை உணர்வுடன் வெளிப்படுத்த முடியும்.

''இழையணிப் பொலிந்த ஏந்துகோட்டு அல்குல்
மடவரல் உண்கள் வாள்நுதல் விறலி''[15]

விறலியர் ஒளிதிகழும் நெற்றியை உடையவள், மைதடவிய கண்களையுடையவள், ஆடல்கலைக்குத் தகுந்தவள் என்று விறலியின் அலங்காரத்தைக் காட்சிப்படுத்துகின்றது. மாணிக்கத்தால் இழைக்கப்பட்ட பொன்மாலை அணிந்தும், பாணன் பாடவும், விறலியர் ஆடவும் சென்றதனை,

''பாணன் சூடிய பசும்பொன் தாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்க''[16]

இவ்வடிகளின் மூலம் விறலியர் பொன்னகைகளை அணிந்துள்ள செய்தியும் கிடைத்துள்ளது. அணிகலன்கள் பொன்னாலாகிய மலர்கொத்துகள், அலங்கார நகைகள் ஆடற்கலைக்குத்

*துணையான யாழ், பதலை போன்ற இசைக்கருவிகளையும் உடைமைகளாகக் கொண்டிருந்தனர் என்ற செய்தியும் சங்கப்பாடல்கள் சங்கமிக்கின்றன.*

*விறலியின் கலைத்திறன்:*

*விறல் சொல் சங்க காலத்தில் வீரத்தையும், வெற்றியையும், வன்மையும், சிறப்பினையும் சுட்டும். எனவே, வீர நிகழ்ச்சியைச் சுவைபட ஆடிப்பாடுவதினால், ''விறலியர்'' எனப்பட்டனர். விறலியர் வீரத்தலைவர்களிடம் பரிசில் பெறும் சிறப்பினையும் உடையவர். வீரத்தைப் பாடி ஆடும் ஆடுகள இயல்பைத் திருமுருகாற்றுப்படை குறிக்கிறது. அதனை,*

*''வென்றது விறல்களம் பாடித் தோல்பெயரால்*
*நிணம்தின் வாயல் துணங்கைத் தூங்க''*[17]

*என்ற அடிகளின் வாயிலாக அறியலாம். பாரியின் கொடைத்தன்மையினைப் புகழ்ந்து பாடி, விறலியானவள் தன் ஆடற்கலையின் மூலம் பரிசில் தரச் செய்யும் அளவிற்குத் திறன் பெற்றிருந்தாள். யாழினை மீட்டி இசைத்து தன் கலைத்திறனை மேம்படுத்திக் காட்டியுள்ளனர்.*

*''சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி*
*விரையொலி கூற்றல் நும்விறலியர் பின்வர*
*ஆடினிர் பாடினிர் செலினே*
*நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே''*[18]

*எனவே, அக்கால அரசர்கள் தமக்கு இருக்கோ இல்லையோ கலைமீது ஆர்வம் கொண்டு நிலம், நாடு, பொன், பொருள்,படைவிலங்குகள் போன்றவற்றைப் பரிசிலாகக் கொடுத்துள்ளனர்.*

*விறலிப்பெண் பாடுவதை வேல்படை கொண்டு வெற்றிகொள்வது வேந்தர்களுக்கு எளிய செயலாகும். இதற்கு ஒப்பாகக் கூறியுள்ளனர். விறலிப்பெண்டிர் பாடினால் போதும். அவ்வெற்றியினைப் பெற்று பரம்புமலையைப் பெற்றுவிடுவர் என்று புறநானூறு,*

*''அளிதோ தானேபேர் இருங்குன்றே*
*வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதோ*
*நீலத்து இணைமலர் புரையும் உண்கண்*
*கிணை மகட்கு எளிதால் பாடினாள் வரினே''*[19]

*குறிப்பிடுகிறது. ஆடற்கலையில் வல்லவர் என்றெண்ணாமல் பாடற்கலையிலும் சிறப்பு வாய்ந்தவள் விறலி எனப் பெருமிதம் கொள்ளலாம். இதனடிப்படையில் விறலியும் பாடினியும் ஒருவரே என்று எண்ணத்தோன்றுகிறது.விறலிப்பெண்டிர் தன் ஆடற்கலையினை வெளிப்படுத்தும் பொழுது தங்களது கையில் வட்டு என்னும் இசைக்கருவியைப் பயன்படுத்தினர்.*

*''அணிமலர் நறுந்தா தூதந் தம்பி*
*கையாடு வட்டிற் றோன்று''*[20]

*புறப்பாடல்வழி ஆடுவதிலும், பாடுவதிலும், இசைமீட்டுவதிலும் திறன் பெற்றவர்களாக விளங்கினர். மகிழ்வான நிகழ்வினைக் கொண்டாடும் பொழுது கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுகின்றன. அப்பொழுது விறலியரின் பங்கு முழுமையாக இடம்பெற்றுள்ளது என்பதில் வியக்கத்தக்கதாய் அமைகின்றன.*

*விழாக்காலங்களில் பல்வகைக் கூத்துகளை ஆடுவர். முதன்முதலில் அரங்கேறி சிறப்புற நடிப்பவர்களுக்குத் தலைக்கோல் என்ற பட்டத்தை மன்னன் வழங்குவான் என்று சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. விறலியர் பாடல் பாடி முழவினை ஒலித்து யாழினை மீட்டி, குழலினை இசைத்து எல்லரி, ஆகுளி என்னும் பறையினை முழக்கி, பதலைப்பறை இயக்கி இருபத்தியொன்ளு இசைத்துறையினையும் கொண்டு பாடல் பாடி, வாழ்த்தி இசைத்து அரசனை மகிழ்விக்கச் செய்தாள் இதனை,*

*''ஓரிகொல்லோ அல்லன் கொல்லோ*
*பாடுவல் விறலி ஓர்வண்ணம் நீரும்''*
*-----------அன்ன வேரியை நல்கி''*[21] *இப்புறப்பாடல் வழி அறியமுடிகிறது. தன்னுடைய கலைத்திறமையால் அரசனிடம் பரிசில் பெற்று வாழ்வினை வாழ்ந்தனர்.*

விறலியும் பரிசிலும்:

விறலியர் ஆடிப்பாடி தன் கலைத்திறனை வெளிக்காட்டினர். அத்தோடு நின்றுவிடாமல் அரசனிடம் புகழ்ச்சிக்கும் வெற்றிச் சிறப்பிக்கும் பலனாக பரிசில் பெற்று வந்தனர். விறலியின் ஆடற்கலைக்குப் பரிசிலாக யானைத் தந்தத்திலிருந்து எடுக்கப்பட்ட வெண்மையான முத்துகளைப் பரிசிலாகக் கொடுத்தனர் என்பதை,

"சிறுகண் யானை வெண்கோடு பயந்த
ஒலிதிகழ் முத்தம் விறலியர்க்கு ஈந்து"[22]

இச்செய்யுளின் வாயிலாக அறிய முடிகிறது. விலையுயர்ந்த முத்து, பொன், விலங்குகளின் தசை, நாடு, மலை போன்றவைகளைப் பரிசிலாகப் பெற்றனர். விலையுயர்ந்த பொருளைக் காட்டிலும் கலைஞரின் கலை உணர்வுக்குத்தான் பெருமதிப்பும் மரியாதையும் இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

முடிவுரை:

விறலியர் சங்க இலக்கியத்தில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் மிகவும் குறைவாகவுள்ளது. ஒவ்வொரு கலைஞருக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு இருக்கும் பொழுது இன்றைய சூழலில் பெண்கலைஞர்களைக் குறைவாக மதிப்பிடுகையில் அவர்கள் கலைத்துறைக்கு முன்வருவதற்கு எண்ணம் குறைவாகவே உள்ளது. இருந்தும் பெண்கள் அனைத்துத் துறையிலும் பங்கு பெற்று வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றனர். கலைத்துறையில் தடம்பதித்துப் பெண்கள் தங்களது வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். விறலியர் சங்ககாலத்தில் சாதித்தனர். இன்றைய பெண்கள் அனைத்துத்துறைகளிலும் தனக்கு ஏற்படும் சோதனைகளைச் சாதனைகளாக்கிக் கொண்டு வருகின்றனர். கலைஞர் ஒவ்வொருவரும் தனித்திறமைகளை வளர்த்துக் கொண்டு தன்னிச்சையாக வாழ்வதற்குச் சங்கஇலக்கியம் சான்றாக அமைகின்றன.

அடிக்குறிப்புகள்:

1. வாழ்வியற் களஞ்சியம்., தொகுதி.5.ப.861
2. இன்னாசி.கு.(பதி.ஆ) வீரமாமுனிவர் அனுகிய சதுரகராதி –ப.178
3. மேலது. ப.179
4. கழகத் தமிழகராதி.,ப.61
5. கதிர்வேற்பிள்ளை.நா., தமிழ் மொழியகராதி, ப.128
6. பிங்கல நிகண்டு, ப.492
7. அபிதான சிந்தாமணி, ப.41
8. சுப்ரமணியன்.ச.வே. தொல்.நூற்.219
9. பிரேமா.இரா.பெண் மரபிலும் இலக்கியத்திலும், ப.38
10. தமிழ் லெக்சிகன், தொகுதி.6., ப. 3733
11. சாமிநாத அய்யர்.உ.வே, புறநானூறு, பா.எ.60
12. மேலது. மலைபடுகடாம், பாடலடி.46
13. மேலது. பதிற்றுப்பத்து, பா.எ 40
14. மேலது,புறநானூறு,பா.எ.105
15. மேலது, 89
16. மேலது, 141
17. சாமிநாதய்யர்.உ.வே. திருமுருகாற்றுப்படை,பாடலடி 55,56
18. மேலது, புறநானூறு, பா. எ.109
19. மேலது,111
20. மேலது, அகம், 108
21. மேலது,புறம், பா.எ.152
22. மேலது,பா.எ.170..

********* ********* ********** ********* ********* ********** ********** **********